பக்கங்கள் 19 + 07

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## யாழில் பாம்பு தீண்டி குடும்பப் பெண் சாவு

யாழ். வடமராட்சிகிழக்கு – ஆழியவளை, கொடுக்குளாய் பகுதியில் பாம்பு தீண்டி குடும்பப் பெண் ஒருவர் சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று மருதங்கேணிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 15 வெள்ளிக்கிழமை 28.06.2024 அதிர்வு 333

# முன்னாள் எம்.பி. ஹிருணிகாவுக்கு 3 வருட கடூழியச் சிறைத் தண்டனை

## தெமட்டகொடையில் இளைஞரைக் கடத்தி சித்திரவதை செய்த வழக்கில்



**ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்துள்ளது.**

**2015ஆம் ஆண்டு கொழும்பு - தெமட்டகொடை பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் சேவையாற்றிய இளைஞர் ஒருவரைக் கறுப்பு நிறத்திலான டிபெண்டர் ரக வாகனத்தில் கடத்திச் சென்று சித்திரவதைக்கு உள்ளாக்கிய சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டதை அடுத்தே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பான தீர்ப்பு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமால் ரணராஜாவால் இன்று அறிவிக்கப்பட்டது.

ஹிருணிகா மீதான 18 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

அமிலபிரியங்கர அமரசிங்க என்ற இளைஞரை, தமது பாதுகாவலர்களை ஈடுபடுத்தி, கடத்திச் சென்றதுடன் அதற்கு ஆதரவு அளித்தக் குற்றச்சாட்டின் கீழ், ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 9 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

தங்களுக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களை ஹிருணிகா பிரேமச்சந்திரவின் பாதுகாவலர்கள் ஒப்புக்கொண்டனர்.

முதல் கட்டத்திலேயே அவ்வாறு குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டதன் காரணமாக அவர்களுக்கு 12 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை உத்தரவைப் பிறப்பித்த மேல் நீதிமன்ற நீதிபதி 2 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறும் பணித்துள்ளார்.

இந்த வழக்கில் மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இருந்து சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் அவரது கைவிரல் அடையாளம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அவர் சிறைச்சாலை அதிகாரிகளால் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அதேநேரம் இந்தத் தீர்ப்புக்கு எதிராக எதிர்வரும் திங்கட்கிழமை மேன்முறையீடு செய்யப்படும் என்று ஹிருணிகாவின் சட்டத்தரணி தெரிவித்தார்.

# ஜே.வி.பியினரே எங்களுக்கு ஆயுதங்கள் வழங்கினார்கள்

## அநுரவின் குற்றச்சாட்டுக்குப் பிள்ளையான் இப்படிப் பதில்

(கனகராசா சரவணபவன்)

ஜே.வி.பி. கட்சியினரே தமக்கு ஆயுதம் வழங்கினார்கள் என்று தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு நேற்று வியாழக்கிழமை விஜயம் செய்த ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மட்டக்களப்பில் பிள்ளையான் மக்களை அச்சுறுத்துகின்றார் என்று தெரிவித்தமை தொடர்பாக இன்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியமைக்குப் பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர்



பிள்ளையான் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“அநுரகுமார திஸாநாயக்கவின் ஜே.வி.பி. கட்சியினர்தான் முதலில் எங்களுக்கு ஆயுதம் வழங்கினார்கள். பின்பு எங்களிடம் மக்களைச் சுடுவதற்கென ஆயுதம் கேட்டார்கள்.

நான் அவர்களுக்கு ஆயுதம் கொடுக்கவில்லை. இவையெல்லாம் அந்தக் கட்சியில் வேறு ஒருவர் தலைவராக இருந்தபோது இடம்பெற்றது.

மக்களை நான் அச்சுறுத்துவதாகச் சொன்னால் மட்டக்களப்பில் அதிக வாக்குகளைப் பெற்றவர் நான். ஜனநாயகத்தைப் பற்றி கதைப்பவர்கள் பொறுப்பாக யோசித்துக் கதைக்க வேண்டும்.

நாட்டைத் தீக்குழிக்குள் தள்ளி பல கலைக்கழக மாணவர்களை வன்முறைக்குத் தூண்டும் ஒரு கட்சி, நாட்டை அழிக்கச் செய்த ஒரு கட்சி எமது மண்ணில் இவ்வாறு கதைப்பது வேதனைக்குரிய விடயம்.” – என்றார்.

# ஆசியாவிலேயே பலமிக்க நாடாக இலங்கையை மாற்றுவார் ரணில்

## மக்கள் ஆணை வழங்க வேண்டும் என்று வஜிர கோரிக்கை



“நாட்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து, ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தொடர்ச்சியாக 12 வருடங்களுக்கு ஆட்சிப் பொறுப்பை வழங்கினால் ஆசியாவிலேயே பலம் கொண்ட நாடாக இலங்கையை மாற்றுவார்.”

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“ஒரு நாடு வங்குரோத்து நிலை அடைந்து விட்டால், அந்த நாடு மீண்டும் வழமைக்கு திரும்புவதற்குக் குறைந்தது 7 முதல் 10 வருடங்களாவது தேவைப்படும். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு வருடங்களுக்குள் நிலைமை தீவிரமடைந்திருந்த சந்தர்ப்பத்திலும் மக்களின் வங்கிக் கணக்குகளுக்கு 15 ஆயிரம் ரூபா பணத்தை வைப்பிலிட நடவடிக்கை எடுத்தார்.

அது மாத்திரமல்லாமல் தமது தரை, ஆகாயம் உரிமையை 30 இலட்சம் ரூபாவுக்குக் கொடுத்துள்ளார். அப்படியானதொரு சந்தர்ப்பத்திலேயே இந்த நாட்டை அவர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

எமது முன்னாள் ஜனாதிபதிகள் சகலரும் 612 வருடங்கள் இந்த நாட்டை ஆட்சி செய்திருக்கிறார்கள். ஆனால், நாட்டு மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்த வாய்ப்பை வழங்கவே இல்லை. ஆனால், விதிப்படியும் இயற்கையாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்தப் பதவி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இயற்கையாகப் பெற்றுக்கொடுக்கப்பட்ட இந்த இரு வருடங்களில், முன்னாள் ஜனாதிபதிகள் 35 - 40 வருடங்களில் செய்தவற்றை செய்து நிரூபித்திருக்கின்றார். எனவே, சிந்தித்து செயற்பட வேண்டியுள்ளது. நாடு வங்குரோத்து நிலைமையிலிருந்து விடுவிக்கப்படும் என்பதே எங்களின் நூறு சதவீத நம்பிக்கையாகும். எனவே, நாட்டை படிமுறையாக முன்னோக்கி கொண்டுச் செல்ல வேண்டியுள்ளது. மாற்று வழிகள் எதுவும் இல்லை.

இதற்கு அப்பால் மக்கள் சிந்தித்துச் செயலாற்றாவிட்டால் இலங்கை காலனித்துவமாக மாறிவிடும். அதனை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கடனைப் பெற்றுக்கொண்டு அதனை மீள செலுத்தாவிட்டால் கடன் வழங்கியவர்கள் குறித்த சொத்துக்களைக் கைப்பற்றுவார்கள். இதுவே கடன் கொடுக்கல் - வாங்கலில் உள்ள இயல்பாகும்.

இதனைக் கருத்தில்கொண்டு, இலங்கையின் எதிர்காலத்துக்காக நாட்டின் தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பிக்கும் இந்த வேலைத் திட்டத்தின்படி, பேதங்களின்றி செயற்பட வேண்டும்.

ஆகவே, ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். தேசிய பாதுகாப்புக்காக அவர் முன்னிலையாக வேண்டும். ஜனாதிபதியாக மேலும் 12 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்தால், இலங்கை ஆசியாவிலேயே சிறந்த நாடாக மாற்றமடையும்.

2020ஆம் ஆண்டிலிருந்து 2024ஆம் ஆண்டு வரையில் தடைப்பட்டிருக்கும் வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும். தொழிலாளர்களுக்குச் சாதகமாக அமையும்.

இலங்கை தொடர்பான சர்வதேசத்தின் நம்பிக்கை உருவாகும். இலங்கையுடனான சர்வதேசத்தின் கொடுக்கல் - வாங்கல்கள் வழமைக்குத் திரும்பும். கடன் செலுத்தாமை தொடர்பில் தற்போது வரையில் அமெரிக்காவில் மூன்று வழக்குகள் இருக்கின்றன. அந்த வழக்குகளிலும் மாற்றம் ஏற்படும். மேலும், பொருளாதார மேம்பாடு தொடர்பான சட்டமூலமும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 2ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் சிறப்புரை நிகழ்த்துவார். அதன் பின்னர் அந்தச் சட்டத்துக்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும்.” – என்றார்.

# வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் வெடிகுண்டுடன் கைது!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து சொகுசு கார், மோட்டார் சைக்கிள், 2 வாள்கள் மற்றும் உள்ளூர் தயாரிப்பு வெடிகுண்டு என்பவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேற்படி சந்தேகநபர் யாழ்ப்பாணத்தில் வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்டமை, வாகனங்களுக்குத் தீ வைத்தமை, நெல்லியடி பகுதியில் புடவைக் கடை ஒன்றுக்குப் பெற்றோல் குண்டு வீசியமை உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரின் வன்முறைக் கும்பலைச் சேர்ந்த மேலும் 5 சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக வீடு உடைப்புக்கள், வாகனங்களுக்குத் தீ வைத்தல் உள்ளிட்ட வன்முறைச்சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்கத் தூதுவருடன் மனோ குழு இன்று சந்திப்பு

## மலையக மக்களுக்கான உரிமைகள் குறித்து எடுத்துரைப்பு

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தலைமையிலான குழுவினருக்கும், மனோ கணேசன் எம்.பி. தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் மலையக சிவில் சமூக தூதுக்குழுவுக்கும் இடையில் காத்திரமான சந்திப்பு இன்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார் மற்றும் த.மு.கூ.ஃஜ.ம.மு. களுத்துறை மாவட்ட அமைப்பாளர் அன்டன் ஜெயசீலன் மற்றும் சிவில் சமூகம் சார்பில் பெ.முத்துலிங்கம், பேராசிரியர் மற்றும் ம.ம.மு. பொது செயலாளர் விஜயசந்திரன், பேராசிரியர் சந்திர போஸ், பேராசிரியர் ரமேஷ் ராமசாமி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அமெரிக்கத் தரப்பில், தூதுவருடன் அரசியல் அலுவலர் அடம் மிசெலோ, யூஎஸ்எய்ட் வேலை திட்ட முகாண்மை விசேட அலுவலர்கள் ஜனக விஜயசிறி, ரெஹானா கட்டிலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்குத் தெரிவித்தாவது:-

"இலங்கையின் பன்னிரண்டு மாவட்டங்களில் பரந்து வாழும் மலையக மக்களை, இந்நாட்டில் முழுமையான குடி உரிமை கொண்ட மக்களாக முறை மாற்றம் பெரும் நோக்கில், மலையக சிவில் சமூகத்தின் ஒத்துழைப்புடன் தமிழ் முற்போக்கு கூட்டணி, நாட்டில் அடுத்து வரும் அரசியல் மாற்றங்களை ஒட்டி வகுத்து வரும் வரை பாதை எழுத்து மூலமான ஆவணம் இன்று அமெரிக்கத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது.

வாழ்வாதார காணி, வதிவிடக் காணி, கல்வி, தொழில் பயிற்சி, நில சார்பற்ற சமூக சபை ஆகிய முன்னுரிமை விடயங்கள் பற்றிய விவரங்கள் இந்த ஆவணத்தில் அடங்கியுள்ளன.

தினக்கூலி தொழிலாளர்கள், பெருந்தோட்டத் துறையில் பங்காளர்களாக முறை மாற்றம் பெறல், பெருந்தோட்ட துறையில் வாழ்கின்ற அனைத்து நிலமற்ற குடும்பங்களுக்கு வதிவிடக் காணி வழங்கள், கல்வித் துறை தொடர்பில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில் நுட்பம் ஆகிய பாடங்களுங்கான விசேட ஆசிரியர் பயிற்சி கல்லூரி அமைத்தல், மலையகப் பெண்களுக்கான தாதியர் பயிற்சி கல்லூரி அமைத்தல் மற்றும் உலகளாவிய நாடுகளில் பரந்து வாழும் சிறுபான்மை இனத்தவர் மத்தியில் அமைய பெற்றுள்ள நில சார்பற்ற சமூக சபைகள் பற்றிய அனுபவங்களைப் பகிர்த்து கொள்ளல் ஆகியவை பற்றி கலந்துரையாடப்பட்டன.

இத்தகைய நிறுவனங்களை அமைப்பது, அவை தொடர்பான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வது, அரசமைப்பு திருத்தங்களை மேற்கொள்வது ஆகிய பொறுப்புகளை மக்கள் ஆணையுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி முன்னெடுக்கும்.

அமெரிக்கா உட்பட எமது சர்வதேச சமூக நண்பர்கள் இவற்றுக்கான தொழில்நுட்ப உதவிகள், அபிவிருத்தி உதவிகள் ஆகியவற்றை எமக்கு வழங்க முன் வர வேண்டும் என்று நாம் கோரினோம். எமது கோரிக்கைகளைச் சாதகமாகப் பரிசீலிக்க அமெரிக்கத் தூதுவர் தலைமையிலான குழுவினர் உறுதி அளித்தனர்.

மேலும், மலையக மக்கள் இலங்கையில் மிகவும் பின் தங்கிய பிரிவினாரக இருப்பதைத் தாம் ஏற்றுக் கொள்வதாகவும், அவர்களுக்கு விசேட ஒதுக்கீட்டு திட்டங்கள் தேவை என்பதைத் தாம் அறிந்துள்ளதாகவும் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார். மேலும், தற்போது, அமெரிக்க அரசின் சார்பில் மலையக மக்களின் நலவுரிமைகள் தொடர்பில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் விளக்கிக் கூறி அது தொடர்பான எழுத்து மூலமான ஆவணம் ஒன்றையும் அவர் எமக்குக் கையளித்தார்.

எம்மிடையேயான இந்தக் கலந்துரையாடலை மென்மேலும் தொடரத் தான் விரும்புகின்றார் எனவும், மலையக மக்களுக்கு இன்னமும் உதவிடும் சந்தர்ப்பங்களை எதிர்நோக்க அமெரிக்க அரசு விரும்புகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், மலையக மக்கள் இந்நாட்டில் முழுமையான குடியுரிமை கொண்ட மக்களாக முறை மாற்றம் பெரும் நோக்கில் தமிழ் முற்போக்குக் கூட்டணியால் முன்வைக்கப்பட்ட ஆவணத்தை மேலும் செழுமைப்படுத்தி, அரசியல் பிரதிநிதிகளும், சிவில் சமூக உறுப்பினர்களும் இணைந்து சர்வ அம்சங்களும் அடங்கிய காத்திரமான அறிக்கையை அமெரிக்கத் தரப்பினரிடம் கையளிப்பது என்றும், பின்னர் அதன் அடிபடையில் விரிவான நடவடிக்கைகளை முன்னெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது." - என்றார்.



# வட்டவளை நிலையத்தில் தடம் புரண்டது ரயில்!

**(மஸ்கெலியா)**

கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கி பயணித்த ரயில் இலக்கம் 1005 இன்று (28) பிற்பகல் பொடிமனிக்கே வட்டவளை நிலையத்தில் தடம் புரண்டதால் உதர ரயில் பாதையில் போக்குவரத்து தடைப்பட்டது என்று நாவலப்பிட்டி ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கி பயணித்த உதார மாணிக்கே ரயிலை நாவலப்பிட்டி நிலையத்திலும், பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த உதார மாணிக்கே ரயிலும் ரொசெல்ல நிலையத்திலும் தடம் புரளும் வரை நிறுத்தப்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறையின் பேச்சாளர் தெரிவித்தார்.

# மன்னாரில் கனிய மண் அகழ்வுக்காக நிலத்தை இழந்தவர்களுக்கு அழைப்பு

## மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்தது

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் கனிய மண் அகழ்வுக்காக நிலத்தை இழந்தவர்கள் மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அந்த ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் இன்று (28) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

மன்னார் நகர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கனிய மண் அகழ்வுக்காக உள்ளூர் காணி முகவர்கள் மூலம் சட்ட விரோதமான முறையில் காணி அபகரிக்கப்படுவதாக பல்வேறு விதமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சில குழுக்கள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தியும் அதிகாரத்தை உபயோகித்தும் சாதாரண மக்களின் காணிகளை அபகரித்து வருகின்றன என்று குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன் பயன் படுத்தப்படாத




நிலங்களுக்கு ஆட்சி உறுதிகளையும் எழுதுவதாகவும் கூறுகின்றனர். அது மாத்திரமின்றி சில காணிகளுக்கு பயன்பாட்டில் இல்லாத வேறு உறுதிகளை எல்லைகளை மாற்றி குறித்த இடங்களில் நில அபகரிப்பிலும் ஈடுபடுகின்றனர் எனவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் ஆதாரங்களோடு குற்றம் சாட்டுகின்றனர்.

இதில் இவ்வாறு முறைகேடான உறுதிப் பத்திரம் தயாரிப்புகளை சில சட்டத்தரணிகள் மேற்கொள்வதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட காணிகளை பல கோடி ரூபா பெறுமதிக்கு ஆஸ்ரேலியாவை தளமாகக் கொண்டு கனிய மண் அகழ்வில் ஈடுபட உள்ள இலங்கை முகவர் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கின்றனர்.

ஆகவே சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த சட்டத்தரணிகள் சாமானிய மக்களின் இருப்பு உரிமையாகிய நிலத்தை இவ்வாறான மோசடிக் கும்பலுக்கு ஆதரவாக செயல்படுவது என்பது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

ஆகவே இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்கள் எங்களோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்த மோசடி கும்பலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உரிய வேலைகளில் ஈடுபட்டு வருகிறோம்.

ஆகவே நில அபகரிப்பாளர்களுக்குஅஞ்சாமல்முன்வருமாறுவேண்டுகோள் விடுக்கின்றோம். - என்றுள்ளது.

# தாந்தாமலை முருகன் ஆலய மகோற்சவம்: திங்கள் கொடியேற்றம்; 22 ஆம் திகதி தீர்த்தம்!

**( வி.ரி. சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய பிரதம குருவும் தாந்தாமலை முருகன் ஆலயத்தின் பிரதம குருவுமான மு.கு.சச்சிதானந்தமூர்த்தி குருக்கள் தலைமையில் திருவிழா பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

கொடியேற்றம் ஆலய பரிபாலன சபை தலைவர் மு.அருணன் தலைமையில் நடைபெற்றுத் தொடர்ந்து 21 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று இறுதியாக ஜுலை 22 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை தீர்த்தோற்சவம் இடம்பெறும். உற்சவ காலங்களில் கதாப்பிரசங்கம் கூட்டு வழிபாடு மற்றும் கலை நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சுழரும் தேர்தல் சக்கரம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான சக்கரம் இன்னும் 19 நாள்களில் உத்தியோக பூர்வமாகச் சுற்றத் தொடங்கி விடும். அதற்குப் பின்னர் யாரும் அதைத் தடுத்து நிறுத்த முடியாது. அதற்கு இன்னும் மூன்று வாரங்கள் கூட இல்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி யீட்டிய கோட்டாபய ராஜபக்ஷ புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றமை 2019 நவம்பர் 17 இல் நடந்தது.

அந்தத் திகதியிலிருந்து ஐந்து வருடங்கள் முடிவதற்குச் சரியாக நான்கு மாதங்களுக்கு முன்பு இருந்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் சுயாதீனமாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு வந்துவிடும்.

அதன்படி வரும் 17ஆம் திகதியன்று - அதாவது இன்னும் 19 நாள்களில் - அந்த அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வருகின்றது.

அந்தத் திகதியிலிருந்து, அரசு கட்டமைப்புக்களின் எந்தவித அழுத்தங்களும், தலையீடுகளும் இன்றி ஜனாதிபதி தேர்தலுக்கான நடவடிக்கைகளை சுதந்திரமாக - சுயாதீனமாக - முன்னெடுக்கும் அதிகாரமும் நியாயாதிக்கமும் அரசமைப்பு ஏற்பாடுகளின் படி தேர்தல் ஆணைக்குழுவுக்கு வந்துவிடும்.

வரும் 17ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் பற்றிய முன் அறிவித்தலை வர்த்தமானியில் வெளியிடுவதன் மூலம் அந்த அதிகாரத்தை தேர்தல் ஆணையம் சுவீகரித்துச் செயல்படுத்தத் தொடங்கும்.

அத்தகைய அறிவித்தல் வெளியிடப்பட்டு 16 நாள்கள் தொடக்கம் 21 நாள்கள் வரையான காலப் பகுதியில் வேட்பு மனுத் தாக்கலுக்கான ஒரு திகதியை தேர்தல் ஆணையம் அறிவிக்கும்.

அதிலிருந்து நான்கு முதல் ஆறு வார காலத்துக்குள் ஒரு நாளில் வாக்களிப்பு தினம் இடம்பெறும்.

எனினும் இந்த ஏற்பாடுகளின்படி வரும் செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் அக்டோபர் 17 ஆம் திகதிக்கும் இடையில் ஒரு நாளில் இந்தத் தேர்தலுக்கான வாக்களிப்பு இடம்பெற வேண்டும்.

ஏற்கனவே தேர்தல் கடமையில் ஈடுபடுவது தொடர்பாக அரச ஊழியர்களின் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளு மாறு மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் இவ்வாரம் அனுப்பப்பட்ட சுற்றுநிருபம் மூலம் பணிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றும், வாக்களிப்பு நிலையங்களாகச் செயல்படும் இடங்களை நேரில் சென்று ஆய்வு செய்யும்படி அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்றும், தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். இரட்நாயக்கா தெரிவித்திருக்கிறார்.

கடந்த பொதுத்தேர்தல் கொவிட் தொற்றுத் தொடர்பான நெருக்கடிகளுக்கு மத்தியில் நடைபெற்றமையால் வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பில் அளவுக்கு மீறிய கவனம் எடுக்க வேண்டி இருந்தது. ஆனால் இப்போது அந்தப் பிரச்சினை இல்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

தேர்தல் பணிக்குத் தேவையான அரச வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளையும் தேர்தல் திணைக்களம் கவனித்து வருவதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் பணிகளை முன்னெடுப்பதற்காக அரசமைப்பு மற்றும் சட்டங்கள் ரீதியான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு 19 நாள்களில் வந்து விடும் என்பதால் அதற்கு முன்னர் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மேலும் நீடிக்கும் நடவடிக்கை ஒன்றை - அதற்கான அரசமைப்புத் திருத்த ஏற்பாடு ஒன்றை - முன்னெடுப்பதற்குக் கால அவகாசம் இல்லை எனவும், அதனால் அந்த முயற்சி கருகிவிட்டதாகவே கருதப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பதவியில் இருக்கும் ஜனாதிபதியும், பிற அரசியல்வாதிகளும், இந்தத் தேர்தலில் போட்டியிடும் தரப்புக்களும், தேர்தல் விதிமுறைகளை மீறாமல் இருப்பதையும், சுதந்திரமாக - சுயாதீனமாக - பக்கச் சார்பில்லாமல் - நீதி, நேர்மையாக - ஒழுங்காக - இந்த தேர்தல் நடைபெறுவதையும் உறுதி செய்யும் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கே உண்டு. இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அரசமைப்பு மூலமும் பிற சட்டங்கள் மூலமும் கட்டுமட்டில்லாத அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நீதி, நியாயமான தேர்தல் ஒன்று நடைபெறுவதை உறுதிப்படுத்த அந்த சட்டங்களையும் அதிகாரங்களையும் தேர்தல் ஆணையம் முழு அளவில் பிரயோகிக்க வேண்டும். மிக இறுக்கமாகவும் பக்கம் சாராமலும் நடந்து கொள்ள வேண்டும்.

# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

(ஹஸ்பர்)



திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று (27) ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள மற்றும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோரின் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி வரவேற்புரையை தொடர்ந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஆரம்பமானது. கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேச செயலக பிரிவுகளில் அரசுக்கு உரிய 300 மீற்றர் அகலமான கடற்கரை வலயத்தில் கனிய மணல் அகழ்வு செய்வதற்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் காணி வழங்க அங்கீகாரம் பெறுதல், நிலாவெளி தொடக்கம் கும்புறுப்பிட்டி கிழக்கு வரையான கடற்கரை 300 மீற்றர் பரப்பளவான அரச காணியை ஜேம்ஸ் குளோபல் தனியார் கம்பனிக்கு நீண்டகால அடிப்படையில் காணி வழங்க அங்கீகாரம் பெறுதல், மாவட்டத்தில் நிலவும் மருத்துவர்கள் மற்றும் ஏனைய சுகாதார துறை வெற்றிடங்கள், மூதூர் கட்டைபறிச்சான் பால நிர்மாணம் தொடர்பான விடயம், மக்களின் கோரிக்கைக்கு அமைய புதிய நீர்க்குளாய் இணைப்பு வழங்குவதில் நிலவும் தாமதம் தொடர்பான விடயம், இலக்கம் 115, 22 யுனிற்றில் கிராம சபை கிணறு உள்ள இடத்தில் கந்தளாய் ரஜவெவ முதியோர் சங்கத்துக்கு காணி வழங்குதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குச்சவெளி, திரியாய் கிராம பிரிவில் 'மொபைல் பிளான்ற்' நிர்மாணிப்பதற்காக ஒரு ஏக்கர் காணியை இலங்கை கனிய மணல் வழங்குவதற்கு அங்கீகாரம் பெறுதல், பேண்தகு வன முகாமைத்துவம் ஊடாக காணி பிரச்சினைகளைத் தீர்த்தல், கந்தளாய் வீதியின் இரு புறங்களில் தயிர் வியாபாரத்தில் ஈடுபடுவதால் நிரந்தரமாக வசிக்கும் மக்களின் காணி உரிமைப் பிரச்சினை, உப்பாறு, கண்டல் காடு விளைநிலங்களுக்கு ஏற்படும் சேதம், கிண்ணியா பிரதேச சபை பிரதேசத்துக்காக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பிரதேச அலுவலகத்தை பெறுதல், போன்ற பல விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், அரச உயரதிகாரிகள் மற்றும் முப்படைகளின் உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திக்கு நுழைவாயில் அமைக்க அடிக்கல்!

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) பிரதான நுழைவாயில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா இன்று (28) கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா பிரதம அதிதியாக கலந்து கொண்டு நுழைவாயிலுக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 50 லட்சம் ரூபா நிதி மூலம் இந்நுழைவாயில் துரித கதியிலும் நவீன முறையிலும் நிர்மாணிக்கப் படுவதற்கான வேலைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் பன்முகப் படுத்தப்பட்ட 15 லட்சம் ரூபா நிதி ஒதுக் கீட்டின் மூலம் இப்பாடசாலையின் பேண்ட் வாத்திய குழுவுக்கான மேலங்கிகளும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதுதவிர இந்தப் பாடசாலையின் 450 மீற்றர் கொண்ட உள்ளக வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலம் காபட் இட்டு செப்பனிடுவதற்கான நடவடிக்கைகளும் இதன்போது மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வின்போது அக்கரைப்பற்று கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.அஹமட் கியாஸ், அக்கரைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.செய்னுடீன் உள்ளிட்ட துறை சார் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.







# மடு மாதாவுக்கு முடி சூட்டிய யூபிலி விழாவை முன்னிட்டு விஷேட வழிபாடும் நிகழ்வுகளும்

(வாஸ் கூஞ்ஞ)



மருதமடு அன்னையின் முடி சூட்டப்பட்ட யூபிலி ஆண்டை முன்னிட்டு மடு ஆலயத்தில் விஷேட வழிபாடுகளும் நிகழ்வுகளும் இடம்பெற இருப்பதால் அனைவரையும் இதில் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரை பெற அழைக்கின்றோம் என்று மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மருதமடு அன்னையின் பெருவிழாவும் முடி சூட்டு விழாவையும் முன்னிட்டு இதற்கான ஆயத்தக் கருத்தரங்கு மன்னார் அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மடுவில் இடம்பெற்றது. இதன் பின் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்,

மன்னார் மறை மாவட்டத்தின் மருதமடு அன்னையின் ஆடி மாத பெருவிழா எதிர்வரும் இரண்டாம் திகதி நடைபெற இருக்கின்றது.

இதற்கு ஆயத்தமாக கடந்த ஞாயிற்றுக் கிழமை 23 ஆம் திகதி கொடியேற்றம் செய்து நவநாள்களையும் தொடர்ந்துள்ளோம்.

இந்த நவநாள்களில் மாலை ஆறு மணிக்கு நவநாள்கள் வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நவநாள்களில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் பக்தர்கள் வருகை தந்து கொண்டு இருக்கின்றார்கள்.

தற்பொழுது இதுவரை ஒரு லட்சம் பக்தர்கள் இத்திருத்தலத்துக்கு வந்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் தற்காலிக கொட்டகை அமைத்து அவற்றில் தங்கி இருப்பதுடன் இந்த நவநாள்களில் பங்குபற்றி வருகின்றனர்.

இம்முறை இந்த பெருவிழாவில் விஷேட நிகழ்வுகளும் இடம்பெற இருக்கின்றன.

மருதமடு அன்னைக்கு முடி சூட்டி 100ஆவது வருடம் நிறைவுறுகின்றது. இதனால் இவ்விழாவை மிக சிறப்பாக இத்தினத்தில் கொண்டாடுகின்றோம். இந்த பெருவிழாவில் கலந்துகொள்வதற்காக பலர் வருகைதர இருக்கின்றனர்.

அன்னைக்கு முடி சூட்டப்பட்ட யூபிலி விழாவை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதி காலை 6 மணிக்கு தமிழில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். காலை 6.45 மணிக்கு சிங்கள மொழியில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இதைத் தொடர்ந்து நற்கருணை சிற்றாலயத்தில் காலை 8 மணிக்கு இரு மொழிகளிலும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இதைத் தொடர்ந்து காலை 10 மணியளவில் முத்திரை வெளியீடு செய்யப்படும். இதன்பின் மாலை 6 மணிக்கு நவநாள் ஆராதனை ஆரம்பமாகும்.

இந்த மாலை ஆராதனை ஒரு விஷேட ஆராதனையாக இருக்கும். இதற்கு ஆயர்களின் பேரவையின் தலைவர் மேதகு கலாநிதி ஹறல்ட் பெரேரா ஆண்டகை தலைமை தாங்கிச் செயற்படுவார்.

இவர் சிங்கள மொழியிலும் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு அன்ரனி ரஞ்சித் ஆண்டகை தமிழ் மொழியிலும் மறையுரை ஆற்றுவர்.

இதன்பின் திவ்விய நற்கருணை பவனி இடம்பெற்று மேதகு கலாநிதி ஹறல்ட் பெரேரா ஆண்டகை யால் நற்கருணை ஆசீர் வழங்கப்படும்.

இதன்பின் அன்னையின் முடி சூட்டு விழாவை முன்னிட்டு சிறப்பு மலர் வெளியீடு செய்யப்படும்.

இதன்பின் பெருவிழா அன்று 2ஆம் திகதி அதிகாலை 4.30 மணிக்கு அனைவரும் எழுவதற்கு ஏற்றவாறு ஆராதனைகள் ஆரம்பமாகும். காலை 5 மணிக்கு இரு மொழிகளிலும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி அதிமேதகு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை தலைமையில் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து மருதமடு அன்னையின் சுரூபத்தை எருந்தருளி வைத்து அன்னையின் தலையில் சூட்டப்பட்டுள்ள முடியின் மேல் ஒரு சிறிய முடியை சூட்டி சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்பின் வழமையான முறையில் திருச்சுரூப பவனி இடம்பெறும். இதைத் தொடர்ந்து கர்தினால் ஆண்டகையால் திருச்சுரூப ஆசிர் வழங்கப்படும்.

இதன் பின்னர் மடுத் திருத்தலத்தில் புதுப்பிக்கப்பட்ட டோம் மற்றும் மடு அன்னைக்கு முன் இருந்து செபிக்கும் இடத்தைக் கருதினால் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்படும் என்று மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.



# பரதநாட்டிய அரங்கேற்றம்





நாட்டிய கலா மந்திரின் இயக்குநர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியும் திரு. திருமதி புஷ்ப கௌரி ஜெகநாதனின் புதல்வியுமான செல்வி குணவர்ஷிகாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உச்சநீதிமன்ற நீதிபதி எஸ்.துரைராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக சைவ மங்கையர் வித்தியாலயம் அதிபர் அருந்ததி இராஜவிஜயன், கல்வி வெளியீடு துறை முன்னாள் ஆணையர் நாயகம் சுப்பிரமணியம்பிள்ளை முரளிதரன், நிர்தனா நடனப் பள்ளியின் இயக்குநர் கலைமாமணி, பாரதகலாநிதி சிவானந்தி ஹறிதர்ஷன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

அணிசேர் கலைஞர்களாக பாட்டு – லாவண்யா ஜெயமோகன், மிருதங்கம் – எம்.லோகேந்திரன், புல்லாங்குழல் – செல்வன் சிவஞானசுந்தரம் ஜூட், தாள தரங்கம் – செல்வன் நக்கீரன் கேதாரநாத், வயலின் – சுந்தர.











# உணவு கையாளும் நிறுவனங்களுக்கு கல்முனையில் தரச் சான்றிதழ் வழங்கல்

(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்தியத்தில் உள்ள உணவு கையாளும் நிறுவனங்களிடையே மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தலில் தெரிவு செய்யப்பட்ட உணவு கையாளும் நிறுவனங்களுக்குத் தரச் சான்றுதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிறுவனங்களுக்கு தர சான்றிதழ் மற்றும் சிறப்பு சான்றுதழ் வழங்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் நேற்று (27) மாளிகைக்காடு பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்துறை மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம். பௌசாத், பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா, மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் உணவு கையாளும் நிறுவனங்களின் உரிமையாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

கல்முனை பிராந்தியத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகள், உணவு உற்பத்தி நிறுவனங்கள், பேக்கரி, சுப்பர் மார்கட், சிற்றுண்டிச் சாலை உள்ளிட்ட 5 வகையான உணவு கையாளும் நிறுவனங்களிடையே நடத்தப்பட்ட தரப்படுத்தலில் பாதுகாப்பாக உணவு கையாளும் சிறந்த நிறுவனங்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற நிறுவனங்களுக்கும், ஏ மற்றும் பி தரங்களைப் பெற்ற நிறுவனங்களுக்குமே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கல்முனை பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்துறை மற்றும் உணவு பாதுகாப்பு பிரிவு பிராந்தியத்தில் உள்ள உணவு கையாளும் நிறுவனங்களை தரப்படுத்தி மதிப்பீடு செய்தமை குறிப்பிடத்தக்கது.









# நிந்தவூர் பள்ளிவாசல்களுக்கு சோலர் மூலம் மின்சார வசதி

## பைசால் காசிம் நிதி ஒதுக்கீடு

(கே. எ. ஹமீட் )

நிந்தவூர் பிரதேச பள்ளிவாசல்களுக்கு சோலார் மின் உற்பத்திக் கட்டமைப்பு வழங்கும் செயற்திட்டத்துக்குத் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் எம். சி. பைசால் காசிம் தனது பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒதுக்கீடு செய்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மின்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் நெருக்கடிக்குள்ளான பள்ளிவாசல்களுக்கு சோலார் பேனல் அமைப்புக்களை பொருத்துவதன் மூலம் நிவாரணம் அளிப்பதற்கான செயற்றதிட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.



இந்தச் செயற்றிட்டத்தின் மூலம் பயனடையவுள்ள பள்ளிவாசல்களின் நிர்வாகத்தினர்களுடனான கலந்துரையாடல் மற்றும் ஆவணங்கள் கையளிப்புநிகழ்வானதுநாடாளுமன்றஉறுப்பனரின் பங்குபற்றுதலுடன் நேற்று (27) நிந்தவூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது சோலார் மின் உற்பத்தி தொடர்பான தெளிவுகள் மற்றும் ஆலோசனைகள் துறை சார் வல்லுநர்களால் பங்குபற்றுனர்களுக்கு வழங்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமால் பள்ளிவாசல் நிர்வாகத்தினர்களுக்கான ஆவணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம். அப்துல் லத்தீப், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. சுல்பிகார், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் அஸ்லம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# உணவுத் தன்னாதிக்கம் மற்றும் சுற்றாடல் தொடர்பான கலந்துரையாடல் கற்பிட்டியில்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி புதுக்குடியிருப்பு தில்லையூர் மீனவ கிராமத்தில் உணவு தன்னாதிக்கம் மற்றும் சுற்றாடல் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மீனவக் குழுத் தலைவர் அன்வர்தீன் தலைமையில் தில்லையூர் மீனவ சங்கக் கட்டடத்தில் இடம்பெற்றது.



இதில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் சிவில் சமூக ஒன்றியத்தின் அரசியல் கட்சி பிரமுகர்கள் உடனான கலந்துரையாடலில் கலந்து கொண்ட தில்லையூர் மீனவ சங்கத்தின் தலைவர் சபுறுல்லாஹ்மீனவ தொழிற் சங்கத்தின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால செயற்பாடுகள் பற்றிய விளக்கங்களை தில்லையூர் மீனவர்களுக்கு வழங்கியது.

உணவு தன்னாதிக்கம் மற்றும் சுற்றாடல் பிரச்சினை தொடர்பான தரவுகளையும் இன்றைய நிலை பற்றிய தகவல்களையும் உள்ளடக்கிய உரை ஒன்றை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் புத்தளம் மாவட்ட இணைப்பாளர் ஜே. பத்மநாதன் நிகழ்த்தினார்.

இந்தக் கலந்துரையாடலின் தீர்வாக உணவு தன்னாதிக்கத் திட்டமாக கற்பிட்டி தில்லையூர் கிராமத்தில் இயற்கையாக வளரக் கூடிய முருங்கை மரம் பற்றி கவனம் செலுத்தப்பட்டது. இதற்கான கேள்வி, சந்தை வாய்ப்புக்கள் என்பனே அதிகமாக காணப்படுகிறது. எனவே "ஒருவர் ஒரு மரம்" நடும் வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# இரண்டு மாணவர்களிடையே மோதல் மாணவன் ஒருவர் ஆஸ்பத்திரியில்!

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

ஹட்டன் கல்வி வலையத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவ பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இரண்டு மாணவர்களுக்கு இடையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் மாணவன் ஒருவருக்கு கை முறிவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொகவந்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிழங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று (27) வியாழக்கிழமை இடம்பெற்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காயங்களுக்குள்ளான மாணவனின் பெற்றோர் பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் முறைபாடு பதிவு செய்துள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு தினங்கலாக அதிபர், ஆசிரியர்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுத்த நிலையில் மாணவர்கள் பாடசாலைக்கு சென்றுள்ளனர்.

குறிப்பிட்ட பாடசாலையின் தரம் 07 இல் கல்வி பயிலும் இரண்டு மாணவர்களுக்கு இடையில் வகுப்பறையில் வைத்தே இந்த மோதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரனைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# 'இரகசியங்களால் ஆன ஒற்றை வரிக் கோடு' எனும் நூல் வெளியீட்டு விழா

(நவாஸ்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் றெட்ணம் சுவாகர் எழுதிய 'இரகசியங்களால் ஆன ஒற்றைவரிக்கோடு' எனும் நூல் வெளியீட்டு விழா பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் (26) இடம்பெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் தலைமையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்டநாடாளுமன்றமுன்னாள்உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் விசேட அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் கலந்து கொண்டார்.

நூல் விமர்சன உரையை வழங்கத் தென் கிழக்கு பல்கலைக்கழக மொழித் துறை பேராசிரியர் கலாநிதி க.ரகுவரன் மற்றும் இலக்கிய செயற்பாட்டாளர் றியாஸ் குரானாவும் வருகை தந்திருந்தனர்.

அதிதிகள் வரவேற்போடு ஆரம்பமான நூல் வெளியீட்டு விழாவில் ஆசிரியை ஜகதாரணியின் நெறியாள்கையின் கீழ் இடம்பெற்ற வரவேற்பு நடனம் அனைவரது பாராட்டையும் பெற்றுக் கொண்டது.


நிகழ்வின் தலைமையுரையைப் பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் வழங்கினார். பின்னர் நூல் அறிமுகம் பிரதம அதிதியால் செய்து வைக்கப் பட்டது. முதற் பிரதியை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ் வரன் பெற்றுக்கொண்டார்.






# 52 நாள்களில் உகந்தையை அடைந்த சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரீகர்கள்!

## ஞாயிறன்று காட்டுக்குள் பிரவேசிப்பர்!!



( வி.ரி.சகாதேவராஜா)

யாழ்ப்பாணம், தொண்டமானாறு செல்வச்சந்நதி – கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் 52 ஆவது நாளில் உகந்தைமலை முருகன் ஆலயத்தை அடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், செல்வச் சந்நதி ஆலயத்திலிருந்து கடந்த மே மாதம் 11 ஆம் திகதி புறப்பட்ட ஜெயாவேல் சாமி தலைமையிலான கதிர்காம பாதயாத்திரைக் குழுவினர் கடந்த 52 நாள்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கடந்து கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை ஆறாவது மாவட்டமான அம்பாறை மாவட்டத்துக்குள் பிரவேசித்தார்கள்.

தற்போது உகந்தை மலையை அடைந்துள்ளனர். அங்கு ஓய்வெடுக்கும் அடியார்கள் நாளை மறுதினம் 30 ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் முதல் நாள் காட்டுக்குள் பிரவேசிக்கவுள்ளனர். 60 ஆவது நாள் கதிர்காமத்தைச் சென்றடைவர்.

# நாதஸ்வரமேதை இசைப்பேரறிஞர் பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா



(த.சுபேசன்)

நாதஸ்வரமேதை இசைப்பேரறிஞர் கலாநிதி எம்.பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மருத்துவர் சு.சி.அருளானந்தம் தலைமையில்இடம்பெறவுள்ளநிகழ்வானதுசெஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனுடைய ஆசியுரைகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் என்.சண்முகதாஸ், பேராசிரியர் என்.சண்முகலிங்கன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் திருமதி கருணா கிருபாசக்தி ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு மலர் வெளியீடு, பிரபல நாதஸ்வர தவில் மேதைகளின் மங்கல இசை, பரதக்கலாவித்தகர் தனேஸ்குமாரின் தனிநடனம், நாதஸ்வர தவில் கலைஞர்கள் கௌரவிப்பு, சங்கீத ஆசிரியை திருமதி நிருத்திகா சஜீபனின் இசைச் சங்கமம் நிகழ்வு, சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் நடனம், ஓய்வுநிலை ஆசிரியர் ச.மார்க்கண்டுவின் கவி வாழ்த்து ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# எப்போது தீர்வு கிட்டும்?





திருகோணமலை மாவட்ட பொது வைத்திய சாலையில் நிலவும் பற்றாக்குறைகளால் வைத் தியசாலைக்கு சமூகமளிக்கும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்த வைத்தியசாலையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசிப்பதற்கு நடவடிக்கை களை மேற்கொள்வதற்கும் நாடாளுமன்ற உறுப்பி னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மக்க– ளின் வேண்டுகோளின் அடிப்படையில் வைத்திய சாலைக்கு நேரடியாக விஜயம் செய்து, வைத்திய சாலையின் நிலவும் தேவைகள், பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்துள்ளார்.

இதனை அடுத்து மீண்டும் ஒருமுறை வைத்திய சாலையின் நிலைப்பாட்டை பரிசீலனை செய்வதற்காக விசேட கூட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பலரது கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரச்சினைக்கு தற்போது வரையிலும் தீர்வுகள் எட்டப்படவில்லை.

திருகோணமலை பொது வைத்தியசாலை யில் சிகிச்சை பெறுவதற்காகக் கிண்ணியா, மூதூர், தம்பலகாமம், கந்தளாய் போன்ற பிரதே சங்களில் இருந்து மக்கள் கடும் சிரமத்துக்கு மத்தி யில் சிகிச்சைக்காக வைத்தியசாலையை நாடி வருவ துண்டு. குறித்த பிரதேசங்களில் வைத்தியசாலைகள் இருந்தாலும் கூட சில மருத்துவ சத்திர சிகிச்சைகள் வைத்தியர்களின் பரிந்துரைகளின் அடிப்படை யில் திருகோணமலை மாவட்ட பொது வைத்திய சாலையில் இடம்பெறுவதுண்டு. இந்தப் பின்னணி யில் திருகோணமலை மாவட்ட பொது வைத்திய சாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக வருகை தருகின்ற நோயாளர்களால் பல குற்றச்சாட்டுகள் முன்வைக் கப்படுகின்றன.

அதாவது ஏதேனும் சத்திர சிகிச்சைக்காக திகதி களைப் பெறுவதற்காக வைத்தியசாலையை நாடும் வேளைகளில் தாம் பல தடைவைகள் அலைக்கழிக் கப்படுகின்றனர் என்றும் வைத்தியர்களைச் சந் திப்பதற்காகவும் சத்திர சிகிச்சைக்கான திகதியை பதிவு செய்வதற்காகவும் தொலை தூரத்தில் இருந்து அதிகாலை பொதுப்போக்குவரத்து ஊடாக வருகை தருகின்ற வேளையிலும் மக்களுக்குச் சரியான கவ னிப்பு கிடைப்பதில்லை என்றும் கவலை தெரிவிக் கின்றனர்.

சத்திர சிகிச்சைகளுக்கும், நாளாந்த சிகிச்சை களுக்கும் திகதிகளைப் பெறுவதற்காக மக்கள் பல முறை ஏமாற்றங்களை சந்திப்பதாக மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

நாட்டில் நிலவும் நெருக்கடியான சூழலால் வைத் தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் என பல்வேறு தரப்பினர்கள் தமக்கான நியாயங்களை வேண்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாலும் அப்பாவி மக்களே இதன் பலனை அனுபவிக்கின்றனர். இதனால் வைத்தியசாலையின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. இவ்வாறு வைத்திய சாலைகளில் போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் நிலவும் வேளைகளில் நோயாளர்களுக்கான சிகிச்சைக்கான திகதி வழங்குவதற்கான பண– யை மேற்கொள்வதற்கு சுகாதார ஊழியர்கள் முன் வருவதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாக உள்ளது. இதனால் நோயாளர்கள் மனதளவிலும் உடலளவிலும் மிகுந்த வேதனை அடைகின்றனர் என்று தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை அதிகாரிகள் அளித்த பதில்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளன.

சத்திர சிகிச்சை கூடத்தில் நிலவும் திருத்த வேலை களின் காரணமாகப் பலமுறை நோயாளர்களுக் கான சத்திர சிகிச்சைகள் பிற்போடப்பட்டன. எனினும் மிக அவசரமான சத்திர சிகிச்சைகள் மாத்திரம் மேற் கொள்ளப்படுகின்றன எனவும் கூறப்பட்டது.

இதில் வைத்தியர்களது அஜாக்கிரதை காணப்பட வில்லை. மாறாக வைத்தியசாலையில் நிலவும் பௌதீக வளங்களின் பற்றாக்குறைகளால் வைத் தியர்களால் மக்களுக்கு பூரணமான மருத்துவ சேவையை வழங்க முடியாத நிலைப்பாடே நிலவு கின்றது.

மற்றுமொரு பாரிய பிரச்சினையாக மருந்துப் பொருள்களின் தட்டுப்பாடு காணப்படுகிறது. நாட் டில் நிலவிய பொருளாதார நெருக்கடியால் இன்று வரை

தொடர்ச்சி▼

# எப்போது தீர்வு கிட்டும்?




தொடர்ச்சி▲

யிலும் இலங்கை பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டேதான் உள்ளது. இதனால் போலி மருத்துவப் பொருள்கள், தரம் குறைந்த மருத்துவப் பொருள்களின் ஊடுருவல் நாட்டில் பரவலாக காணப்படுகின்றது. மேலும் இலங்கையின் மருத்துவப் பொருள்களுக்கு கட்டமைக்கப்பட்ட விலையிடும் பொறிமுறை காணப்படாமையால் அதிக விலையில் மருத்துவ பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. ஏழை மக்களது கொள்வனவு சக்திக்கு அப்பாற்பட்டதாக இன்று மருத்துவச் செலவுகள் காணப்படுகிறது. அதிக பணம் கொடுத்து மருத்துவ சிகிச்சையை மேற்கொள்ள முடியாத மக்களே அரச வைத்தியசாலைகளை நாடுகின்றனர். எனினும் இலங்கையில் நிலவும் மருத்துவப் பொருள்களுக்கான தட்டுப்பாடு பல வைத்தியசாலைகளில் தாக்கம் செலுத்துகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்தப் பின்னணியில் அரச மருத்துவமனையை நாடும் மக்களே ஏமாற்றப்படுகின்றனர். தற்போது திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையிலும் மருந்துப் பொருள்களின் தட்டுப்பாட்டால் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையில் மருந்துப் பொருட்களுக்குக் கட்டமைக்கப்பட்ட விலையிடும் பொறிமுறை எவ்வாறுள்ளது?

இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் இது குறித்து பல தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மருந்துப் பொருள்களுக்கான விலையிடல் என்பது பாதுகாப்பு மற்றும் சகாயத் தன்மை போன்றவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும். தரத்தை உறுதி செய்யாமல் மிகவும் குறைந்த விலைகளில் மருந்துப் பொருள்களை விற்பனை செய்வது என்பது நோயாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

போலியான மற்றும் தரம் குறைந்த மருந்துப் பொருள்களைத் தவிர்ப்பதற்குப் பிரயோக விலை நிர்ணய பொறிமுறையைக் கொண்டிருப்பது அத்தியாவசியமானதாகும்.

சுகாதார அமைச்சின் தேசிய மருந்துப் பொருள்கள் தர உறுதிப்படுத்தல் அமைப்பு, முறையான தரப் பரிசோதனைகளை முன்னெடுப்பதில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது.

விற்பனையாளர்களால் சமர்ப்பிக்கப்படும் தரவுகளின் அடிப்படையில் மருந்துப் பொருள்கள் அனுமதிக்கப்படுகின்றன. இதனால் குறைந்த விலைகள் காரணமாக தரம் குறைந்த தயாரிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தரமின்மை காரணமாக அரச வைத்தியசாலைகளில் இருந்து பல மருத்துவப் பொருள்கள் மீளப் பெறப்பட்டுள்ளன.

இதனால் பெருமளவு செலவுகளும் ஏற்பட்டுள்ளன என இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தரமான மருத்துவப் பொருள்களைத் தயாரிப்பதில் ஏற்படும் செலவுகள் பற்றி பல நோயாளர்கள் உணர்வதில்லை. குறைந்த விலைகளில் உள்ள மருத்துவ பொருள்களுக்கான கேள்வி இதனால் அதிகரிக்கும் போக்குள்ளது.

டபிள்யூ.எச்.ஓ. அறிக்கையில் வெளியிடப்பட்ட தகவலின் அடிப்படையில், மெக்சிகோ, பாகிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் 30 சதவீதமான மருத்துவப் பொருள்கள் போலியானவை அல்லது தரம் குறைந்தவை என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. விலை குறைந்த மருத்துவப் பொருள்களால் ஏற்படக் கூடிய சகல பாதிப்புகளில் இருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்கு இலங்கை அவசியமான சகல படிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட விலை நிர்ணய பொறிமுறை என்பது அவசரத் தேவையாக அமைந்திருப்பதுடன் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகத்தர்கள், மற்றும் விற்பனையாளர்கள் என சகலரையும் உள்வாங்கி இது அமைந்திருக்க வேண்டும். செலவின் பிரகாரம் மாத்திரமின்றி மருத்

தொடர்ச்சி▼



# எப்போது தீர்வு கிட்டும்?

தொடர்ச்சி▲

துவப் பொருள்களின் பலாபலன் மற்றும் பாதுகாப்பு அடிப்படையிலும் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

மூலப்பொருள்களின் தரம், பொதியிடல், தரக் கட்டுப்பாடு, களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து போன்ற அனைத்தும் நுகர்வோர் தயாரிப்புகள் பாதுகாப்பாக சென்றடைவதை உறுதி செய்வதற்காக அமைந்திருப்பது அத்தியாவசியமானதாகும்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நோயாளர் காவு வண்டிகளின் பற்றாக்குறையால் நோயாளிகள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிய வருகின்றது.

பாவனைக்காக 12 நோயாளர் காவு வாகனங்கள் இருந்தும் மூன்று வாகனங்கள் மாத்திரமே சேவையில் ஈடுபட்டு வருகின்றன என்று அண்மையில் செய்திகள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. வைத்தியசாலைக்கு மிக அவசியமானவையாக நோயாளர் காவு வண்டிகள் காணப்படுகின்றன. நோயாளிகளை மேலதிக சிகிச்சைகளுக்காக வேறு வைத்திய சாலைகளுக்குக் கொண்டு செல்வதில் தாமதங்கள் ஏற்படுகின்றன என்றும் இதனால் நோயாளிகள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட பொதுவைத்திய சாலையில் ஊழியர்களுக்கான பற்றாக்குறை அதிகமாக உள்ளது. வைத்திய நிபுணர்கள், தாதியர்கள், சுகாதாரத் தன்னார்வலர்கள் மற்றும் சிற்றூழியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றது. இப்பின்னணியில் நோயாளர்களுக்கான மருத்துவ சேவையை வழங்குவதில் இன்னல்களை எதிர்கொள்வதாக வைத்தியசாலை தரப்பு கூறுகின்றது.

மேலும் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுகளில் போதிய கவனமின்மை, இருதய சத்திர சிகிச்சை தொடர்பான கட்டடத் தொகுதி இன்று வரையும் பூரணப்படுத்தப்படவில்லை.

வைத்தியசாலையின் பௌதிக வளங்கள் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன. வைத்தியசாலை விடுதிகளில் அடிப்படை வசதிகள் பூர்த்தியின்றி காணப்படுகின்றன. சில விடுதிகளில் குடிநீர் வசதிகள், மின்விசிறிகளின் சீரற்ற தன்மை நிலவுகிறது.வைத்தியசாலையில் உள்ள சிரி இயந்திரம் மிகப் பழமையாக காணப்படுவதுடன் எம்.ஆர்.ஐ. இயந்திரத்தொகுதி வைத்தியசாலையில் இல்லை.

இவ்வாறு பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யாது வைத்தியசாலை இயங்கிக் கொண்டிருக்கின்றது.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் எரிக்கப்படுகின்ற வைத்திய கழிவுகளால் சுற்றுப்புறச்சூழல் மாசடைந்து வருகிறது என்று மக்கள் அதிருப்தியடைகின்றனர். திருகோணமலை பொது வைத்தியசாலையில் கழிவுப் பொருள்களை எரிக்கின்ற இயந்திரப் பகுதியில் புகைப்போக்கியானது ஒரு வருடத்துக்கு மேலாக உடைந்துள்ள நிலையில் அது திருத்தப்படாமல், வைத்தியசாலைக் கழிவுகள் எரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் வெளியேறும் புகையானது வைத்தியசாலை உட்பட அதனை அண்டிய பகுதிகளிலும் வளி மாசடைதலை ஏற்படுத்துகிறது. வைத்தியசாலையில் உள்ள நோயாளிகள், திருகோணமலை கடற்கரையை நோக்கி வரும் உல்லாசப் பயணிகள் உட்பட அயலில் உள்ள மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

வைத்தியசாலையின் மருத்துவ கழிவுகள், சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றப்படுகின்ற உடற்பாகங்கள், பிளாஸ்டிக் பொருள்கள் போன்றவை எரிக்கப்படுவதாக தெரிய வருகின்றது.

ஆரம்பத்தில் குறித்த புகையானது கிட்டத்தட்ட 60 அடி உயரமான புகைப் போக்கின் மூலம் வெளியேவிடுவிக்கப்பட்டிருந்த போதும்தற்போதுபுகைப் போக்கி சீர் செய்யாமல் கழிவுப் பொருள்கள் எரிக்கப்பட்டு வருவதால் புகையானது 40 அடி உயரத்தில் வெளியிடப்படுகிறது. இதனால் சூழல் பாதிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக பலர் முறைப்பாடுகள் செய்தும் இதுவரையிலும் இந்நிலை குறித்து வைத்தியசாலை நிர்வாகம் கவனமெடுக்கவில்லை.

வைத்தியர்களுக்கான விடுதி பிரச்சினைக்கான தீர்வுகள் கடந்த கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டது. அதில் ஆலோசகர், மருத்துவர்களுக்கான விடுதி பிரச்சினைக்கு மாற்றுபாயமாக வைத்தியர்கள் வெளிப்புறத்தில் வாடகைக்கு தங்கும் சந்தர்ப்பங்களில் அரசு அதற்கான வாடகை கொடுப்பனவை மேற்கொள்ளும் என்ற ஆலோசனையை வழங்கியுள்ளார்.

எனினும் இது தற்போது வரையிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறியுள்ளனர். திருகோணமலை மாவட்ட மக்களுக்கு இன்றியமையாத சேவையை வழங்கும் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையானது அரசியல் உள்ளார்ந்த நோக்கங்களால் பழிவாங்கப்படாது மக்கள் நலனை முதன்மையாகக் கொண்டு உரிய அதிகாரிகள் கூடிய விரைவில் இப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**ச.தனுஷ்கா,**
**ஊடகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.**



# கர்நாடகாவில் பஸ் விபத்தில் பதின்மூன்று பக்தர்கள் சாவு!

## அதிகாலையில் நடந்த பயங்கரம்

கர்நாடக மாநிலம் ஹாவேரி மாவட்டம் பைடாகி பகுதியில் இன்று (ஜூன் 28) வெள்ளிக்கிழமை அதிகாலை புனே பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் நிறுத்தப்பட்டிருந்த சரக்கு டிரக் வாகனம் மீது பயணிகள் சென்ற மினி பஸ் மோதிய விபத்தில் 13 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ள சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெலகாவி மாவட்டத்தில் சாவாடத்தி பகுதியில் உள்ள எல்லம்மா கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு தங்களது சொந்த ஊரான சிவமோகாவிற்கு பக்தர்கள் மினி பஸ்ஸில் சென்று கொண்டிருந்தபோது அதிகாலை 4 மணி அளவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ள நிலையில் படுகாயமடைந்தவர்கள் மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கிடையில் பஸ் ஓட்டும்போது சாரதி தூங்கியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# டெல்லி விமான நிலைய மேற்கூரை இடிந்து விழுந்ததில் மூவர் மரணம்!

## முதலாவது முனையத்தில் சம்பவம்





**புதுடெல்லி, ஜூன் 28**

தலைநகர் டெல்லியில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. அதன் காரணமாக டெர்மினல் 1 ( முனையம் 1) இன் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்தது. இதில் மூன்று பேர் உயிரிழந்தனர். நால்வர் படுகாயமுற்றனர்.

நேற்று இரவு முழுவதும் பெய்த தொடர் கனமழையால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆங்காங்கே மழைநீர் தேங்கியதால் டெல்லி நகரம் முழுவதும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. மேலும், சுரங்கப்பாதைகளில் தேங்கியுள்ள



தண்ணீரில் வாகனங்கள் சிக்கியதால் மக்கள் கடும் அவதிக்கு ஆளாகினர்.

இந்த சூழலில் டெல்லி விமான நிலையத்தின் முனையம் 1 இல் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்தது. கனமழை காரணமாக மேற்கூரை இடிந்து விழுந்ததில் நிறுத்தி வைத்திருந்த கார்கள் பலத்த சேதமடைந்தன. உள்ளே சிக்கியிருந்தவர்களை தீயணைப்புத்துறையினர் மீட்டனர். காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 6 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்நிலையில் மேலும் இருவர் பின்னர் உயிரிழந்துள்ளமையால் பலி எண்ணிக்கை 3ஆக அதிகரித்தது.

டெல்லி விமான நிலைய மேற்கூரை இடிந்து விழுந்த சம்பவத்தினால் முனையம் 1 இல் இருந்து விமானப் போக்குவரத்து மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்தப்பட்டுள்ளது.




# பொலிவியாவில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு முயற்சித்த இராணுவத் தளபதி கைது!

**சுக்ரே, ஜூன்2 8**

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்ட இராணுவ தளபதி கைது செய்யப்பட்டார்.

அப்போது நடைபெற்ற வன்முறையில் 9 பேர் படுகாயம் அடைந்தனர்.

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் அதிபர் லூயிஸ் ஆர்ஸ் தலைமையிலான ஆட்சி நடைபெறுகிறது. இங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசாங்கத்தை கவிழ்க்க இராணுவத் தளபதி ஜ/வான் ஜோஸ் ஜூனிகா சதித் திட்டம் தீட்டினார்.

அவரது உத்தரவின்பேரில் இராணுவத்தின் ஒரு பிரிவினர் அதிபர் மாளிகை, நாடாளுமன்றம் உள்ளிட்ட முக்கிய பகுதிகளை முற்றுகையிட்டனர். மேலும் கவச வாகனம் மூலம் நாடாளுமன்ற கதவுகளை உடைக்கும் முயற்சியும் நடைபெற்றது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதுகுறித்து இராணுவத் தளபதி ஜூவான் ஜோஸ் ஜூனிகா கூறுகையில் –

அதிபர் லூயிஸ் ஆர்சை நாங்கள் மதிக்கிறோம். அதேசமயம் நாட்டில் உண்மையான ஜனநாயகம் மீட்டெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேலும் ஜீனைன் அனெஸ் உள்பட பல அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே கிளர்ச்சியாளர்களுக்கும், இராணுவ வீரர்களுக்கும் இடையே மோதல் நடைபெற்றது. அப்போது நடைபெற்ற வன்முறையில் 9 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதன் முடிவில் சதித்திட்டதுக்கு மூளையாக செயல்பட்ட இராணுவத் தளபதி ஜ/வான் ஜோஸ் ஜூனிகா கைது செய்யப்பட்டார். இதனையடுத்து அந்த படைகள் பின்வாங்கியதால் ஆட்சிக் கவிழ்ப்பு சதி முறியடிக்கப்பட்டது.

இராணுவத்தின் இந்த ஆட்சி கவிழ்ப்பு முயற்சிக்கு அமெரிக்கா, பிரேசில் உள்பட உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். மேலும் ஜனநாயகத்தை பாதுகாக்க ஒன்று திரளும்படி பொதுமக்களுக்கு பொலிவியா அதிபர் லூயிஸ் ஆர்ஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

# ஸ்லோவாக்கியாவில் பஸ் மீது ரயில் மோதியதில் 5 பேர் பலி

**பிராஸ்லவா, ஜூன் 28**

ரயில் ஒன்றுடன் பஸ் மோதி விபத்திற்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடான செக் குடியரசு தலைநகர் பிராகாவில் இருந்து ஸ்லோவாக்கியா நாட்டின் வழியாக ஹங்கேரி தலைநகர் புடாபெட்ஸ் நகருக்கு ரயில் சேவை இயக்கப்பட்டு வருகிறது.

அந்தச் சேவையில், பிராகா நகரில் இருந்து புடாபெட்ஸ் நகருக்கு நேற்று ரயில் சென்றுகொண்டிருந்தது. ஸ்லோவாக்கியாவின் நோவி சம்கி நகரில் ரெயில் சென்றுகொண்டிருந்தபோது பயணிகள் பஸ் தண்டவாளத்தை கடக்க முயன்றுள்ளது. அப்போது அதிவேகமாக வந்த ரயில் பஸ் மீது



மோதியது. இந்த கோர விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். மேலும், 4 பேர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தலைநகர் பிரட்டிஸ்லாவாவிலிருந்து 80 கிலோமீட்டர் தொலைவில் உள்ள நோவ் சாம்கி நகரில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்துள்ளவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் பேருந்தில் 10 பேரும், ரயிலில் 200 பேர் வரையிலும் பயணித்துள்ளனர்.




# பாடம் எடுத்தது முன்னாள் நடையைக் கட்டியது நடப்பு சம்பியன்

இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதியில் வைத்து, நடப்புச் சம்பியனுக்கு பாடம் எடுத்த முன்னாள் சம்பியன் இந்திய அணி. நடப்புச் சம்பியனை அரையிறுதியுடன் நடையைக் கட்டவைத்தது.

இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது.

இதில், முன்னாள் சம்பியன் இந்தியாவும், நடப்புச் சம்பியன் இங்கிலாந்தும் களம் கண்டன.

இந்தப் போட்டி இலங்கை நேரப்படி நேற்று இரவு 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட வேண்டியது, மழை குறுக்கிட்டதால் போட்டி தொடங்கத் தாமதம் ஏற்பட்டது.

இதில் நாணயச் சுழற்சியல் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரர் விராட் கோஹ்லி 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார். மறுமுனையில் நின்ற இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா சிறப்பாக ஆடி 39 பந்துகளில் 57 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த ரிஷப் பொண்ட் 4 ஓட்டங்களுடன் வெளியேற, சூர்யகுமார் யாதவ் மற்றும் ஹர்திக் பாண்டியா ஆகியோர் முறையே 47 மற்றும் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 7 விக்கெட்டுகளை இழந்து 171 ஓட்டங்களைக் குவித்தது. ரவீந்திர ஜடேஜா (17) மற்றும் அர்ஷ்தீப் சிங்(10) ஆகியோர் கடைசிவரை ஆட்டமிழக்காது களத்தில் நின்றனர்.

இங்கிலாந்து சார்பாக பந்துவீச்சில் கிறிஸ் ஜோர்டன் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர். ரீஸ் டோப்லெ, ஜோப்ரா ஆர்ச்சர், சாம் கர்ரன் மற்றும் ஆதில் ரஷித் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

பின்னர் 172 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இங்கிலாந்து அணி, ஆரம்பத்திலேயே விக்கெட்டை இழந்தது. அந்த அணியின் பில் சால்ட் 5 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார்.

இவருடன் மறுமுனையில் நின்ற அணித்தலைவர் ஜோஸ் பட்லர் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.




இறுதியில் அந்த அணி 103 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழக்க, 68 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இந்திய அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்தியா சார்பாக சிறப்பாகப் பந்து வீசிய அக்சர் பட்டேல் மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். ஜஸ்பிரித் பும்ரா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகனாக இந்தியாவின் அக்சர் பட்டேல் தெரிவானார்.

இந்த வெற்றியையடுத்து இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இந்திய அணி, மறுமுனையில் மோதத் தயாராக இருக்கும் தென்னாபிரிக்க அணியை, இலங்கை நேரப்படி நாளை இரவு 8 மணிக்குக் களம் காணவுள்ளது.



பக்கங்கள் 07

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 28/06/2024


## நோர்த் யோர்க்கில் சூட்டில் ஒருவர் பலி

கனடாவின் நோர்த் யோர்க் பகுதியில் குடியிருப்புத் தொகுதியொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். C2



# இடைத் தேர்தல் தோல்வியினால் பிரதமர் ட்ரூடோவுக்கு நெருக்கடி

## கட்சிக்குள் அதிருப்தி சமிக்ஞைகள்

கனடாவில் செவ்வாயன்று நடந்து முடிந்த இடைத்தேர்தலில், ஆளும் ட்ரூடோவின் லிபரல் கட்சி முக்கிய இருக்கையை இழந்துள்ள விடயம் ட்ரூடோவுக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

ரொறண்டோ சென் போல்ஸ் தொகுதியில் இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. தேர்தலில், ஆளும் ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சி தோல்வியை சந்தித்தது. C2

# உள்ளக பரிசோதனையில் லிபரல் கட்சி இப்போது!

## குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் கூறுகிறார்

ஒன்ராரியோ, ஜூன் 28

கன்சர்வேட்டிவ் தலைவர் பியர் பொய்லியேவ்வை வெற்றி கொள்ளக் கூடிய நிலையில் ஜஸ்டின் ட்ரூடோ உள்ளார் எனக் குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

டொரன்டோ- சென் போல்ஸ் தொகுதியின் இடைத் தேர்தல் முடிவு வெளிப்படுத்தும் செய்தி தெளிவானது எனவும் அமைச்சர் மாரக் மில்லர் தெரிவித்துள்ளார்.

இந்த வாரம் நடைபெற்ற டொரன்டோ- சென் போல்ஸ் தொகுதி இடைத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளர் டொன் ஸ்டுவர்ட் வெற்றி பெற்றார்.

இந்த இடைத் தேர்தலில் தோல்வியடைந்தாலும் பிரதமருக்கான ஆதரவை அவரது அமைச்சரவை உறுப்பினர்கள் பலரும் வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



லிபரல் கட்சி ‘உள்ளக பரிசோதனையின் காலகட்டத்தை’ எதிர்கொள்கிறது என்பதையும் மார்க் மில்லர் ஏற்றுக் கொண்டுள்ளார்.



# பழங்குடியினர்களுக்கான சபைக் கூட்டத்தில் பல பிரேரணைகளுக்கு இந்தத் தடவை வெட்டு!

ஒன்ராரியோ, ஜூன் 28

எதிர்வரும் வருடாந்த பொது சபை அமர்வில் சிறுவர் நலன்கள் தொடர்பான பிரேரணகளை முதல் தேசங்களுக்கான அசெம்பிளி (பழங்குடியினர்களுக்கான சபை) அனுமதிக்கப் போவதில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது.

நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு பகிரங்க மன்னிப்பு கோரும் பிரேரணையும் இதில் உள்ளடங்குவதாக கூறப்படுகின்றது.

பழங்குடியின சிறார்களுக்கு தேவையான நேரத்தில் உடனடியாக மருத்துவ பராமரிப்பை வழங்குவதனை உறுதி செய்யும் வகையிலான சட்ட விதியான ஜோர்தான் கோட்பாடுகளில் திருத்தங்களை உள்ளடக்கிய ஸ்குவாமிஷ் பழங்குடியின குழுவின் தலைவர் கெல்சிலெமினால் கொண்டு வரப்பட்ட பிரேரணையும் இதில் உள்ளடங்குகின்றது.

பொதுச் சபையின் விதிகளைப் பின்பற்றிய போதும், தமது பிரேரணையும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுச் சபையில் தடைசெய்யப் பட்டுள்ளதாக கெல்சிலெம் கூறியுள்ளார்.

தமது கலாசாரம் மற்றும் இறைமையின் இன்றியமையாத அம்சமாக கருதப்படும் பொட்லெட்ச் கொண்டாட்டத்தை அவமதித்தமைக்காக பழங்குடியினர் சபையினை பகிரங்கமாக மன்னிப்புக் கோர வலியுறுத்தும் ஒசோயொஸ் இன்டியன் குழுவின் பிரேரணையும் தடை செய்யப்பட்டுள்ளது.

## இடைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளரான டொன் ஸ்ரூவர்ட், லிபரல் கட்சியின் கோட்டை என கருதப்படும் அத்தொகுதியிலேயே, லிபரல் கட்சி வேட்பாளரான லிஸ்லி சேர்ச்சை 590 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடையச் செய்துள்ளார்.

கன்சர்வேட்டிவ் கட்சியின் வெற்றி, லிபரல் கட்சிக்கு பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது.

30 ஆண்டுகளாக அத்தொகுதி தொடர்ந்து லிபரல் வசம் இருந்த நிலையில், தற்போது, கன்சர்வேட்டிவ் கட்சியினர் அத்தொகுதியை முதல் தடவையாகக் கைப்பற்றியுள்ளார்கள்.

இந்தத் தோல்வியை அடுத்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்வாரா என கேள்விகள் எழுந்துள்ளன.

ஆனால், தான் பிரதமர் பதவியை ராஜினாமா செய்யப்போவதில்லை என்று கூறியுள்ளார் ட்ரூடோ.

நானும் எனது குழுவினரும், கனேடியர்கள் காணவும் உணரவும் தக்க வகையில் உண்மையான முன்னேற்றத்தை கொடுப்பதற்காக இன்னமும் அதிக அளவில் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது என்பதைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன எனக் கூறியுள்ளார் அவர்.

“வாக்காளர்களின் கரிசனையை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. வாக்காளர்களின் கரிசனைகளையும் அவர்கள் அதிருப்தியையும் புரிந்து கொள்கிறோம். இது ஒரு கடினமான தருணம். ஒட்டுமொத்த லிபரல் கட்சி உறுப்பினர்களும் கடுமையாக உழைக்க வேண்டிய தருணம். கனடியர்கள் தெளிவாக புரிந்து கொள்ளக்கூடிய மெய்யான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியம்” - என பிரிட்டிஷ் கொலம்பியாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் வெற்றிக்காக உழைக்க வேண்டும் எனவுன் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், கட்சியின் தலைமையில் மாற்றம் வேண்டும், ட்ரூடோ பிரதமர் பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என அவரது கட்சிக்குள்ளேயே குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளதாக பெயர் வெளியிட விரும்பாத லிபரல் கட்சியினர் சிலர் கூறியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

சமீபத்தில் ஐரோப்பாவில் நடந்து முடிந்த பல தேர்தல்கள், மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதை தெளிவாகக் காட்டியுள்ளன.

அது பிரித்தானியாவானாலும் சரி, ஜேர்மனியானாலும் சரி, ஆளும் கட்சியினர் பின்னடைவையே சந்தித் துள்ளார்கள்.

கனடாவும் அதற்கு விதிவிலக்கல்ல என்பதை இந்த இடைத்தேர்தல் முடிவு கோடி காட்டுகின்றது.

## நோர்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

23 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இரண்டு பேர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளனர் என நேரில் பார்த்த சாட்சியங்கள் தெரிவித்துள்ளன.

துப்பாக்கிச் சூடு நடத்திய நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனவும், சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.



# கனடாவின் இராணுவத்தின் கட்டளை பீடத்தில் மாற்றம்

ஒன்ராரியோ, ஜூன் 28


கனடாவின் சிரேஷ்ட இராணுவத் தளபதிக்கான ஆணை-மாற்ற நிகழ்வு ஜூலை 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

புதிய பாதுகாப்பு பிரதானியாக நியமிக்கப்படவுள்ளவர் குறித்து தகவல் எதுவும் வெளியாகாத நிலையில் இந்த நிகழ்வு குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

40 வருடங்கள் கனடிய இராணுவத்தில் பணி புரிந்த ஜெனரல் வெய்ன் எய்ர் தமது ஓய்வு குறித்து கடந்த ஜனவரி மாதம் அறிவித்திருந்தார்.

தமக்கு அடுத்ததாக பாதுகாப்பு பிரதானியாக நியமிக்கப்படுபவரை விரைவில் அறிவிக்குமாறு தமது ஓய்வு அறிவிப்பின் போது ஜெனரல் எய்ர் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# பழங்குடியினர் அடையாளத்தை மோசடியாக பயன்படுத்திய பெண்ணுக்கு 3 வருடச் சிறை

நுனாவுட், ஜூன் 28

தம்மை இனுயிட் பழங்குடியினத்தைச் சேர்ந்தவராக போலியாக அடையாளங் காட்டிக் கொண்ட டொரன்டோவைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு மூன்று வருட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான டொலர்களை நலன்புரிச் சேவையூடாக தமது மகள் மாருக்குப் பெற்றுக்கொள்வதற்காக இவர் இந்த அடையாள மோசடியில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

‘இது பழங்குடி மக்கள் சுரண்டப்படுவதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்’ என்று நுனாவுட் நீதிபதி மியா மானோச்சியோ வியாழக்கிழமை கரிமா மஞ்சிக்கான தண்டனை விசாரணையில் கூறினார்.

‘இந்த வழக்கு, பழங்குடியினராக மோசடி செய்யும் எந்தவொரு நபருக்கும் ஒரு சமிக்ஞையாக இருக்க வேண்டும், ஒரு குற்றச் சூழலில் பழங்குடியினராக அடையாளத்தைத் தவறாகப் பயன்படுத்தினால் கணிசமான அபராதம் விதிக்கப்படும்’ என அவர் குறிப்பிட்டுள்ளார்.

18 மாதங்கள் முதல் இரண்டு ஆண்டுகள் வரை காவலில் இருக்க வேண்டும் என்ற அரச வழக்கறிஞரின் பரிந்துரையை விட நீதிபதி மனோச்சியோ கடுமையான தண்டனையை வழங்கியுள்ளார். கனடாவில் Inuit அடையாள மோசடி வழக்கில் டொரண்டோ பெண்ணுக்கு மூன்று ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கனடாவின் நுனாவுட் நீதிபதி, இன்யூட் பூர்வீக குடிமக்கள் அல்லாத டொரண்டோ பெண்ணுக்கே இப்படி மூன்று ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளார்.

கரிமா மஞ்சி என்ற அப்பெண், இன்யூட் அடையாளத்தை தவறாகப் பயன்படுத்தி ஐயாயிரம் டொலருக்கும் அதிகமான மோசடி செய்த குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார்.

கரிமா மஞ்சிவின் இரட்டையர் மகள்கள் இன்யூட் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்று போலித் தகவலை அளித்து இரண்டு நிறுவனங்களில் இருந்து சலுகைகளைப் பெற்றமைக்காக இந்தத் தண்டனையை அவர் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அரசு தரப்பு வழக்கறிஞர் இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை பரிந்துரைத்தார். ஆனால், குற்றத்தின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு நீதிபதி கடுமையான தண்டனையை விதித்தார்.

குறிப்பிடத்தக்க வகையில், மஞ்சி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, அவரது மகள்கள் மீதான குற்றச்சாட்டுகள் தள்ளுபடி செய்யப்பட்டன.




# வெஸ்ட்ஜெட் விமான சேவையினரின் வார இறுதி வேலைநிறுத்தம் தவிர்ப்பு

ஒன்ராரியோ, ஜூன் 28

வெஸ்ட்ஜெட் விமான சேவையால் நடத்தப்படவிருந்த நீண்ட வார இறுதி வேலைநிறுத்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

விமான நிறுவனம் மற்றும் விமான பொறியியலாளர்களை அவர்களின் சர்ச்சையைத் தீர்ப்பதற்கு நடுவர் மன்றத்தை நாடுமாறு மத்திய அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது.

கனடா நாள் நீண்ட வார இறுதியில் நூறாயிரக்கணக்கான பயணிகளுக்கு விமான சேவைக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய வேலை நிறுத்தத்தைத் தவிர்க்க மத்திய அரசாங்கத்தின் இந்த தலையீடு துணை புரிந்தது.

இந்த நடுவர் மன்றத்தில் மத்தியஸ்தம் எட்டப்படாவிட்டால் இரு தரப்புக்கும் இடையிலான முட்டுக்கட்டையைத் தீர்க்க கனடா தொழிலாளர் சட்டத்தின் கீழ் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தும் என தொழில் அமைச்சர் சீமஸ் ஓ'ரெகன் தெரிவித்துள்ளார்.



# கனடாவில் கணிசமாக அதிகரிக்கும் மளிகைப் பொருள்களின் விலைகள்

கனடாவில் தொடர்ச்சியாக மளிகைப் பொருள்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக உணவுப் பணவீக்கம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடிய புள்ளி விவரவியல் திணைக்களம் இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ளது. கடந்த மே மாதத்தில் மளிகை பொருள்களின் விலைகள் 1.5 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது கடந்த மே மாதத்தை விடவும் சிறிதளவு அதிகரிப்பு எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் மளிகை பொருள்களின் விலை அதிகரிப்பு 1.4 வீதமாகக் காணப்பட்டது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் பின்னர் மே மாதம் மளிகைப் பொருள் விலை உயர்வு அதிகளவில் பதிவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரையில் உணவு பொருள்களின் விலைகள் 22.5 வீதத்தினால் அதிகரித்துள்ளன.

இதன்படி மக்களின் செலவுகளில் பிரதானமான செலவு அதிகரிப்பாக உணவுப் பொருள் விலை அதிகரிப்புக் காணப்படுகின்றது.

மரக்கறி வகைகள், இறைச்சி பழ வகைகள், அல்ஹகோல் அல்லாத பானங்கள் என்பவற்றின் விலைகள் அதிகளவு உயர்வடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள்களின் விலை உயர்வு காரணமாக உணவகங்களில் வழங்கப்படும் உணவின் அளவு குறைக்கப்படுவதாக மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.



# றொறண்டோ பியர்சன் விமான நிலையத்தினால் பிதேசவாசிகளுக்கு விமானச் சத்தத் தொல்லை

கனடாவில் முக்கிய விமான நிலையங்களில் ஒன்றான றொறண்டோ பியர்சன் விமான நிலையத்திற்கு அருகாமையில் வாழ்ந்து வரும் மக்கள், விமானங்கள் பறக்கும் சத்தம் குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

விமானங்கள் பறக்கும் சத்தம் தங்களை வெகுவாக பாதிப்பதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நள்ளிரவு வேளைகளில் விமானங்கள் பறக்கும் சத்தம் தங்களது உறக்கத்திற்கு இடையூறாக அமைகின்றது என அவர்கள் கூறுகின்றனர்.

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு எட்டு முதல் ஒன்பது மணித்தியால நித்திரை அத்தியாவசியம் என அரசாங்கம் - குறிப்பாக கனடிய சுகாதார திணைக்களம் - அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு பின்னணியில் விமானங்கள் பறக்கும் சத்தம் ஆரோக்கியமான நித்திரைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் காலை 6:30 மணி வரையில் சுமார் 39 விமானங்கள் தமது வீட்டுக்கு மேல் பறந்ததாக அந்தப் பகுதியைச் சேர்ந்த பெபியோ ஒவிட்டினி தெரிவித்துள்ளார்.

விமான பயணங்களினால் ஏற்படக்கூடிய சத்தம் குறித்து முறைப்பாடு செய்வதற்காக பியர்சன் விமான நிலையம் மக்களுக்கு விசேட தொலைபேசி இலக்கம் ஒன்றினையும், இணைய தளமொன்றையும் அறிமுகம் செய்துள்ளது.

எவ்வாறினும் இந்த முறைப்பாடு செய்யும் முறைமை நடைமுறைக்குப் பொருத்தமற்றது என மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஏனெனில் விமானம் பறக்கும் சந்தர்ப்பத்தில் அது பற்றிய விவரங்களை பதிவிட்டு முறைப்பாடு செய்வது தமது நித்திரையை மேலும் குழப்பும் செயற்பாடு என மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே விமானங்கள் பறப்பதனால் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பில் முறைப்பாடு செய்யும் எளிமையான வழிமுறை ஒன்று அவசியம் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

பியர்சன் விமான நிலையம் ஊடாக மாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஆறு வீத பங்களிப்பு கிடைக்கப்பெறுவதாகவும் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் விமான நிலையத்தில் பணியாற்றி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விமான நிலையத்தின் ஒலி மாசடைதல் தொடர்பான பிரச்சினைக்கான நடவடிக்கைகள் அனைத்துக் காரணிகளையும் கருத்திற் கொண்டே எடுக்கப்பட வேண்டியுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





# புதிய ஜனநாயகக் கட்சிப் பிரிவுகளின் ஐக்கியத்தைக் கோருகிறார் ஜக்மீத் சிங்

ஒன்ராரியோ, ஜூன் 28

புதிய ஜனநாயகக் கட்சியின் மத்திய மற்றும் மாகாணப் பிரிவுகள் தமது இலக்கில் ஐக்கியமாக இருக்க வேண்டும் என புதிய ஜனநாயகக் கட்சியின் மத்திய பிரிவுத் தலைவர் ஜக்மீத் சிங் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் மத்திய மற்றும் மாகாணப் பிரிவுகள் தனித் தனியாக செயற்பட வேண்டும் என்ற கருத்துக்கள் அல்பேர்ட்டாவில் எழுந்து வருகின்ற நிலையிலேயே ஜக்மீத் சிங் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

கன்சர்வேட்டிவ் கட்சியைத் தோற்கடிப்பதற்கு மத்திய மற்றும் மாகாண புதிய ஜனநாயகக் கட்சிகள் ஐக்கியமாக செயற்பட வேண்டும் என ஜக்மீத் சிங் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் மக்களுக்காக உழைக்கும் அரசாங்கத்திற்கான தொலைநோக்குப் பார்வை ஒன்றை கட்டியெழுப்ப முடியும் என அவர் கூறியுள்ளார்.

இந்த வார ஆரம்பத்தில் அல்பேர்ட்டா மாகாண புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக பொறுப்பேற்ற நஹீட் நென்சியை சந்தித்த போது இந்த விடயங்களைத் தாம் பகிர்ந்தார் என ஜக்மித் சிங் குறிப்பிட்டுள்ளார்.




# கல்கரியில் நீர் நெருக்கடி ஜூலை 1 இல் முடிவுக்கு!

அல்பேர்ட்டா, ஜூன் 28

கல்கரியில் பாதிப்புக்கு உள்ளாகியிருந்த நீர்க்குழாய் கட்டமைப்பு சரிசெய்யப்பட்டு ஜூலை முதல் திகதி முதல் மக்கள் பாவனைக்கு திரும்பும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜூன் 5ஆம் திகதியன்று கல்கரி நகரத்திற்கு நீர் விநியோகம் செய்யப் பயன்படும் நீர்க் கட்டமைப்பில் சேதம் ஏற்பட்டதால், பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

ஆரம்பத்தில் சில நாள்களில் நீர் விநியோகம் சீராகும் எனத் தெரிவித்திருந்த போதிலும், பின்னர் அதற்கு நீண்ட காலம் தேவைப்படும் எனக் கண்டறியப்பட்டது. இதனையடுத்து கல்கரி நகரில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, எதிர்பார்த்ததை விட விரைவில் நீர் கட்டமைப்பு பழுது பார்க்கப்பட்டு மக்கள் பாவனைக்குத் திரும்பவுள்ளதாக கல்கரி நகர மேயர் அறிவித்துள்ளார்.



# ஷில்கொட் பழங்குடியினர்களின் அங்கீகாரத்தின் 10 வருட நிறைவு நிகழ்வில் ட்ரூடோ, கரி சங்கரி

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன் 28 குவெட்ஸ்-என் நில்டி பாத்வே உடன்படிக்கையின் (Gwets'en Nilt'i Pathway Agreement - GNPA), ஐந்து வருட புதுப்பித்தலுக்காக மத்திய அரசாங்கம் 39 மில்லியன் டொலர்களை வழங்கி யுள்ளது.

அரசாங்கத்தின் அர்ப்பணிப்பினையும், அர்த்தமுள்ள தேர்ச்சியையும், ஒத்துழைப்பையும் இந்த நிதியுதவி வெளிப்படுத்துவதாக பழங்குடியின விவகார அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

ஷில்கொட்-இன் பழங்குடியினரின் பழங்குடியின அந்தஸ்தை வழங்கி பத்து வருடங்கள் நிறைவுறுவதனையொட்டிய நிகழ்வில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுடன் அமைச்சர் ஆனந்த சங்கரியும் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது, ஷில்கொட்-இன் பழங்குடியினருடன், நல்லிணக்கம், மதிப்பு, மற்றும் பங்காளித்துவத்திற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டினை வலியுறுத்தியதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.





